JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **31/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.11** | Prosecution /Defence / Court | |
| Name | **Devarajan** | Caste | |
| Father's Name | **Sellamuthu** | Calling | |
| Village | **Salem** | Religion | |
| Taluk | **Salem** | Age | |

**A1, A4 present. A2, A3 Absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date.13.02.2025.**

**முதல் விசாரணை**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் துறை துணை கண்காணிப்பாளராக தற்போது சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவில் சேலத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.11.2014 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது இரவு சுமார் 21.00 மணிக்கு திருமதி. பூங்கொடி, கணவர் பெயர் கே.எஸ்.ராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று நிலைய குற்ற எண்.624/2014 சட்டப்பிரிவு 392 இதச ஆக பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையினை அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் பெருந்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலினை காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 25.11.2014 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால்

சரிதான். முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு தயார் செய்யப்பட்டதாகவும், காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் மூன்று நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோதிரம் பற்றி அடையாளம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மோதிரம் பிளைன் மோதிரம் என்று புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் ஜன்னலைத் திறந்து சொன்னவுடன் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து காப்பாற்றியதாக சொல்லப்படவில்லை என்றால் சொல்லியுள்ளார். புகாரில் சாவி இல்லை என சொன்னதால் பூட்டை உடைத்து காப்பாற்றியதாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது வாதியுடன் யார் வந்தார்கள் என்றால் வாதி மட்டும் வந்தார்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் 2 வது பக்கத்தில் பீரோவில் இருந்த இரண்டு கம்மல்கள் எடுத்து என்ற வாசகம் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் மேற்படி இரண்டு கம்மல்கள் எடுத்த என்ற வாசகம் முதல் தகவல் அறிக்கையில் முதல் தகவல் அறிக்கையில் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் இடைச்செருகல் யாரால் எழுதப்பட்டது என்றால் என்னால் எழுதப்பட்டது. புகாரில் உள்ள புகார்தாரர் கையொப்பமும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள புகார்தாரரின் கையொப்பமும் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரருக்கு நகல் வழங்கப்பட்டதற்கான மேற்குறிப்பு இல்லை என்றால் தவறு. புகார்தாரரிடம் கையொப்பம் பெற்றாலே நகல் வழங்கப்பட்டதாக அர்த்தம். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை (F.A.C.)